**செ. கு. எண்**: 306 **நாள்**: 28-08-2012

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை – 28.8.2012

திருப்பூர் மாவட்டம், அவினாசிபாளையம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. R.பழனிசாமி அவர்கள் 24.8.2012 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

திருவண்ணாமலை மாவட்டம், கடலாடி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. K.துரை அவர்கள் உடல்நலக் குறைவால் 24.8.2012 அன்று காலமானார் என்ற செய்தியையும்;

விழுப்புரம் மாவட்டம், வளவனூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. E.இளங்கோவன் அவர்கள் உடல்நலக் குறைவால் 26.8.2012 அன்று காலமானார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிக்க துயரம் அடைந்தேன்.

காவல் துறை உதவி ஆய்வாளர் திரு. இளங்கோவன், சிறப்பு உதவி ஆய்வாளர்கள் திரு. பழனிசாமி மற்றும் திரு. துரை ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

உடல்நலக் குறைவால் காலமான உதவி ஆய்வாளர் திரு. E.இளங்கோவன், சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. திரு. K.துரை மற்றும் மாரடைப்பால் காலமான சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. R.பழனிசாமி ஆகியோரின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா இரண்டு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**